முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1275

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

27.03.2023, திங்கட்கிழமை

1. ஆறுமுக சக்தியே அரங்கா வாழ்க
ஆற்றல்மிக வரம்தரும் தேசிகா வாழ்க
மாறுதலை செய்வேன் என இந்த கலியினுள்
மாதவத்தை வரமாக இறக்கி அற்புதம் நடத்துகின்ற
2. நடத்துகின்ற அரங்கனே ஞானியே
ஞாலமதில் உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தடையற ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் பங்குனி மாதம் 13 ம் நாள், 27.03.2023, திங்கட்கிழமை)
தவசி உன் நிலை உயர எடுத்துரைப்பேன்
3. உரைக்கவே அரங்கன் உன் சக்தி பலம்
உயர்வாக தர்மரூபில் உயர்ந்துவர
வரமென உன் தொண்டர்படைகளும்
வையகமெல்லாம் நிரம்பி வர
4. வருகின்ற இந்த மாற்றம்
வையகத்தை மாற்றும் மகா சக்தியாகும்
தருகின்ற அரங்கன் தர்மம்
தரணியையே ஞானவான்கள் ஆக்கும் உறுதியாகும்
5. ஆகவே உலகோர் ஒன்றிணைந்து
அரங்கன் தர்மத்தையே காத்துவந்தால் போதும்
போதுமப்பா இந்த தர்மம் பெருகப்பெருக
பூவுலகமெல்லாம் ஆற்றல் பெருகி
6. ஆறுதலாய் அரங்கன் தேடுகின்ற
ஆற்றல்மிக்க ஞான ஆட்சிக்காலமாக
காலமாக சடுதி மாறுதல் காணும்
கலியுகமே எல்லா பாதுகாப்பும் காணும்
7. ஞானவான் அரங்கன் காட்டுகின்ற நன்னெறி
ஞாலமதை தேற்றுவதோடு
நாநிலத்தில் உள்ள மக்கள் அனைவருக்கும்
ஞானிகளாகும் வாய்ப்புத் தந்து
8. இடரின்றி அவரவரை இனிபிறவாத
இயம்பிடுவேன் பெரும்பேற்றை காணும் பாக்கியம்
பாக்கியம் தந்து அவரவர்க்கும்
பசிபிணி சோடை பிறவகை இன்னல்வாரா சர்வபாதுகாப்பும் தந்து அருள்புரியும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–